ஆசிரியரிடமிருந்து........!

# ஞானம் தரும் தேவன்



ஆண்டவராகிய இயேசுவின் இனிய நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெயம் பெற்று, சாட்சியோடு வாழ தெய்வீக ஞானம் மிகவும் அவசியம். ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி என்று வேதம் கூறுகிறது (நீதி.4:7). இன்று உலக கல்வி, புத்தகங்கள் நமக்கு அறிவை கொடுக்கலாம். ஆனால் ஞானத்தை கொடுக்கிறவர் கர்த்தரே. தேவனுடைய பிள்ளைகள் இந்த கடைசி நாட்களில் மிகவும் ஞானமாய் நடக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (கொலோ. 4:5; எபே.5:15).

படிப்பில் சிறந்து விளங்க ஞானம் தேவை. புதிய கல்வியாண்டு துவங்கியிருக்கும் இந்த நாட்களில் மாணவர்கள் தேவ ஞானத்தைப் பெற்று சிறந்து விளங்க வேண்டும். குடும்பத்தை நன்றாக நடத்த ஞானம் தேவை. வாழ்வின் உயர்வுக்கு ஞானம் தேவை. சபையை நன்றாக நடத்த ஞானம் தேவை. நல்ல தலைவர்களாக விளங்க ஞானம் தேவை. இப்படிப்பட்ட ஞானத்தை கர்த்தர் தேவ மனிதர்களுக்கு எப்படி கொடுத்தார் என்றும், அதைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் சுருக்கமாக தியானிப்போம்.

## 1. ஞானம் நிறைந்த தேவ மனிதர்கள் (PEOPLE of Wisdom)

**யோசேப்பு** : எகிப்து தேசத்தில் யோசேப்பைப் போல் விவேகமும், ஞானமும் உள்ளவன் வேறொருவனும் இல்லை என்று வேதம் கூறுகிறது. (ஆதி.41:39). அந்த ஞானம் அவனைக் கீழான நிலைமையிலிருந்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக மாற்றியது (ஆதி.41:43; அப்.7:10). தேவன் அவனுக்குக் கொடுத்த ஞானம் பலரைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றியது (ஆதி. 41:53-57).

**பெசலெயேல்** : கர்த்தர் பெசலெயேலை ஆசரிப்புக் கூடார வேலையை நுணுக்கமாக சிறப்பாகச் செய்வதற்கு ஞானத்தினால் நிரப்பினார் (யாத்.35:31-35). நமக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் சிறப்பாக, திறமையாகச் செய்வதற்குத் தேவையான ஞானத்தைத் தர தேவன் வல்லவர்.

**சாலொமோன்**:தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும், புத்தியையும், கடற்கரை மணலத்தையான மனோவிருத்தியையும் கொடுத்தார். அக்காலத்தில் வாழ்ந்த சகல மனிதர்களின் ஞானத்தைப் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது என்று வேதம் கூறுகிறது (1 இராஜா.4:29,30;3.11,12,13,23). இந்த ஞானத்தின் மூலம் அவன் ஜனங்களை விசாரித்ததுமின்றி கர்த்தருக்கென்று பிரம்மாண்டமான ஆலயத்தையும் கட்டினான்.

**தானியேல் :** தேவன் தானியேலுக்கு சகல எழுத்திலும், ஞானத்திலும் அறிவையும் சாமார்த்தியத்தையும் கொடுத்தார் (தானி.1:17). மற்றெல்லா மனிதர்களிலும் தானியேல் பத்து மடங்கு சமர்த்தனாக இருந்தான் (தானி.1:20). இந்த ஞானம் தானியேலை தேசத்தில் உயர்த்தியது.ஜெயத்தைக் கொண்டு வந்தது (தானி.6:28).

**ஸ்தேவான் :** ஆதித் திருச்சபையில் பிரச்சனைகள் வந்தபோது அதை தீர்ப்பதற்கேற்ற ஞானம் உடையவனாக ஸ்தேவான் இருந்தான். மேலும் எதிரிகள் விரோதமாக வந்தபோது அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற் போயிற்று என்று வேதம் கூறுகிறது (அப்.6:10).

**இயேசு :** இயேசு ஞானத்தில் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் (லூக்கா 2:52). அவருடைய ஞானத்தைக் கண்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (மத்.13:5, 4).

## 2. ஞானத்தின் மேன்மை (PREEMINENCE of Wisdom)

முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிறது. இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல (நீதி.8:11;3:15; யோபு 28:18). பசும் பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தை அங்கீகரித்துக் கொள்ளுங்கள் (நீதி.8:10). பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம். வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை! (நீதி.16:16). பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் (பிரசங்கி 9:16), யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம் (பிரசங்கி 9:18) என்றெல்லாம் கூறி, வேதம் ஞானத்தின் மேன்மையையும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கிறது.

மேலும் ஒரு குடும்பம் ஆசீர்வாதமாக இருக்க ஞானம் தேவைப்படுகிறது. வீடு ஞானத்தினால் கட்டப்பட்டு, விவேகத்தினால் நிலைநிறுத்தப்படும் (நீதி.24:3). ஒரு பட்டணமும் தேசமும் எதிரிகளின் கையிலிருந்து காப்பாற்றப்பட ஞானம் தேவை (பிரசங்கி 9:14.15). ஒரு காரியத்தை செவ்வையாக செய்வதற்கு ஞானமே பிரதானம் (பிரசங்கி 10:10).

கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தத்தோடு காணப்பட ஞானம் நமக்கு தேவை என்பதை பத்துக் கன்னிகைகளின் உவமை எடுத்துக்காட்டுகிறது (மத்.25:1-12).

ஞானம் என்பது நமக்குள்ள அறிவை குறிப்பிட்ட சூழ்நிலையில் சிறப்பாக பயன்படுத்தக்கூடிய திறனாகும் (Wisdom is the ability to take knowledge and apply it to particular situations). ஆகவே, ஞானமே முக்கியம்! ஞானத்தை கண்டடைகிற மனுஷன் பாக்கியவான் (நீதி.3:13; 4:17)!

## 3. ஞானத்தைப் பெறுவது எப்படி? (PREREQUISITES for Wisdom)

ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே? என்று யோபு பக்தன் கேட்பதை வேதத்தில் வாசிக்கிறோம் (யோபு 28:12). தேவ ஞானத்தை நாம் பெற்றுக்கொள்ள கீழ்கண்ட தகுதிகளை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

### 1. கர்த்தருக்கு பயந்து நடவுங்கள்

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி.1:7;9:10; சங்.111:10; யோபு 28:28) என்று வேதம் கூறுகிறது. யோசேப்பைப் போலக் கர்த்தருக்குப்

பயந்து, தீமையை விட்டு விலகும்போது (நீதி.8:13:3.7; ஆதி.39:9) தேவன் நமக்கு ஞானத்தைத் தருகிறார்.

## 2. வேதத்தைக் கைக்கொள்ளுங்கள்

வசனத்தைக் கைக்கொண்டு நடவுங்கள். இதுவே உங்களுக்கு ஞானமாய் இருக்கும் என்று தேவன் கூறுகிறார் (உபா.4:6). கர்த்தருடைய வேதம் பேதையை ஞானியாக்கும் (சங்.19:7). ஆகவேதான் சங்கீதக்காரன் உமது வசனம் என்னை எனக்குப் போதித்தவர்களைப் பார்க்கிலும் மற்றும் முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாக மாற்றியது என்று கூறுகிறான் (சங்.119:97-100). வசனத்தை வாசியுங்கள், தியானியுங்கள், கைக்கொள்ளுங்கள். அப்பொழுது மெய்ஞானத்தை பெறுவீர்கள் (நீதி.1: 5).

## 3. நீதிமானாக வாழுங்கள்

கர்த்தர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார் (நீதி.2:7). நாம் தானியேலைப் போல உலகத்தால் கறைப்படாதபடி நம்மை காத்துக் கொள்ளும்போது, பரிசுத்தமாக வாழத் தீர்மானிக்கும்போது (தானி.1:8) தேவன் நமக்கு ஞானத்தை ஈவாக அளிக்கிறார் (தானி. 1:20).

## 4. தாழ்மையாயிருங்கள்

தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு என்று வேதம் கூறுகிறது (நீதி.11:2). தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபையையும், ஞானத்தையும் அளிக்கிறார் (நீதி.3:34). தாழ்மையின் சிந்தையோடு, மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் சிந்தையோடு இருக்கும்போது ஞானம் வருகிறது. ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு (நீதி.13:10) என்று வேதம் நமக்கு கூறுகிறது.

## 5. ஜெபியுங்கள்

நமது ஆண்டவர் இயேசுவே ஞானத்தின் உறைவிடமாக இருக்கிறார். அவருக்குள் ஞானம் அறிவு என்கிற பொக்கிஷங்கள் அடங்கியிருக்கிறது (1கொரி.1:31: கொலோ.2:3). அவருடைய அறிவு அளவற்றது (சங்.147:5). ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் என்று வேதம் கூறுகிறது (யாக்.1:5). கர்த்தர் ஞானத்தை தருகிறார் (நீதி.2:6). சாலமோன் தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான் (1 இராஜா.3:9). தேவனிடத்தில் பட்சபாதமில்லை (ரோமர் 2:11). ஆகவே நாமும் அவரிடத்தில் கேட்கும்போது நமக்கும் நிச்சயமாகத் தருவார் (மத்.7 : 11).

## 6. ஆவியில் நிரப்பப்படுங்கள்

பரிசுத்த ஆவியானவர் ஞானத்தின் ஆவியானவர் (ஏசாயா 11:2). நாம் ஆவியினால் நிரப்பப்படும்போது விசேஷ ஞானம் நமக்கு உண்டாகிறது. பெசலெயேல், ஸ்தேவான் போன்றவர்கள் ஞானத்தின் ஆவியினால் நிறைந்திருந்தார்கள். கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்தார்கள். ஆவியினால் நிரம்பியிருந்த ஸ்தேவானின் ஞானத்தை எதிர்த்து நிற்க ஜனங்களால் கூடாதிருந்தது (அப். 6:5,10).

## 7. கவனியுங்கள்

எறும்பின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள் என்று வேதம் கூறுகிறது (நீதி.6:6). அது சுறுசுறுப்புள்ளது, எதிர்காலத்திற்காக திட்டமிட்டு செயல்படக்கூடியது. பூமியில் சிறியவைகளாயிருந்தும் மகா ஞானமுள்ள

நான்குண்டு - எறும்பு, குழிமுசல், வெட்டுக்கிளி, சிலந்திபூச்சி (நீதி.30:24-28). இவைகளை கவனித்து, எப்படி பாதுகாப்பாக இருக்க வேண்டும், ஒற்றுமையாக இருக்க வேண்டும். சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்பவைகளை கற்று ஞானமடைவோம்.

நாம் மேற்கண்ட கட்டளைகளை நிறைவேற்றும்போது தேவன் நிச்சயமாக நமக்கு ஞானத்தை தருவார். தேவன் தரும் ஞானம் நமக்கு வெற்றியைக் கொண்டு வரும். ஐசுவரியத்தையும் உயர்வையும் பெற்றுத்தரும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**

(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)

மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

## பரத்திலிருந்து வரும் ஞானம்

**பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.**

**யாக்கோபு 3:17**

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

## நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது **Tamil District Council of SIAG** என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

**மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.**

பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

**30, நாவலர் நகர், மதுரை – 625 016. போன் : 0452 2301165.**